Pay of Teachers

* 78 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to fix uniform scales of pay for all categories of teachers, irrespective of the different kinds of managements under the new scheme of education?

THE HON. SRI C. SUBRAMANIAM : The question of revision of the scales of pay of Government employees including teachers under different types of managements is engaging the attention of the Madras Pay Commission.

SRI K. VINAYAKAM : Are the Government aware that different scales of pay are allowed to teachers employed in the different agencies, like the Government, district boards and municipalities and private-managed schools and have the Government placed all these facts before the Pay Commission for considering this aspect of the question also?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir, all aspects are being placed before the Pay Commission.

SRI N. K. PALANISAMI : எய்டெட் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியருடைய சம்பளத்தை 31—1—45 என்ற விகிதத்தில் கொடுக்க வேண்டும் என்று 1955–வது வருஷமே எற்பாடு செய்த பின்னரும் கூட இன்னும் 30—½—33 என்ற விகிதத்தில் கொடுப்பதற்குக் காரணம் என்ன ? இதை உடனடியாக மாற்றுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மூலக் கேள்விக்கும் இதற்கும் கொஞ்சங்கூட சம்பந்தம் இல்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : When is the Pay Commission expected to submit its report to the Government, Sir?

THE HON. SRI C. SUBRAMANIAM : As the hon. the Leader of the Opposition knows, the Madras Pay Commission has to take into account the Central Pay Commission's recommendations. Just now the Central Pay Commission has submitted its report. As soon as that report is available, the Madras Pay Commission will consider the whole question. Meanwhile they are collecting all the available information.

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்களே ஒரே தகுதியான, ஒரே வகையான ஊழியம் ஆற்றக்கூடியவர்களுக்கு ஒரேவகையான ஊதியம் நிர்ணயம் செய்யவேண்டும் என்பதை ஒப்புக்கொள்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : பே கமிஷனுக்கு நாங்கள் கொள்கை வகுத்துக் கொடுக்கமுடியாது. அவர்களுடைய சிபார்சு வெளிவந்தபிறகு நாம் இந்தக் கொள்கை அடிப்படையில் அதைப் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்.

SRI R. KRISHNASAMI NAIDU : தனியார் துறை பள்ளிக்கூடத்திற்கும், ஸ்தல-ஸ்தாபனங்களின் கீழ் நடக்கும் பள்ளிக்கூடத்திற்கும் சர்க்கார் ஒரேவிதமாக கிராண்டு கொடுப்பதில்லை. ஸ்தல-ஸ்தாபனங்களின் கீழ் நடக்கும் பள்ளிக்கூடத்திற்குக் கொடுக்கும் கிராண்டு

மிகக் குறைவாக இருப்பதன் காரணத்தினால் இவை சரிவர நடக்க முடியாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இந்த வித்தியாசத்தையும் நீக்க அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காகத்தான் பஞ்சாயத்து பில் பாஸ் பண்ணியிருக்கிறோம். அதில் கல்விக்காக எவ்வளவு ஒதுக்கவேண்டும் என்று கண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் நிதி போதிய அளவு ஸ்தல-ஸ்தாபனங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை அங்கத்தினர் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

SRI A. GOVINDASAMY : மத்திய சர்க்காரில் பே கமிஷன் சிபார்சுகள் தெரிந்த பிறகுதான் நம்முடைய பே கமிஷன் அறிக்கை சமர்ப்பிக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை இவர்கள் எதிர்பார்க்கும் நோக்கம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதையும் கவனத்தில் கொண்டு இவர்கள் தங்கள் சிபார்சைச் செய்ய வேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அதனால்தான் காத்து இருக்கவேண்டியதாக இருக்கிறது.

Misappropriation of funds by village officers.

*79 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ல் எத்தனை மணியக்காரர், கணக்குப்பிள்ளைகளின் மீது பணம் கையாடினதாக நடவடிக்கை எடுக்கப்பட்டது?

(ஆ) எத்தனை பேருக்கு சிறை தண்டனை, அபராதம் விதிக்கப்பட்டது?

(இ) எத்தனை பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர்?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Action has been taken against 302 village officers in 1958 for misappropriation of money;

(*b*) Sixty-five persons were imprisoned and forty persons were fined;

(*c*) Fifty-seven persons were removed from service.

SRI S. M. ANNAMALAI : எவ்வளவு பணம் கையாடப்பட்டது என்று சொல்லமுடியுமா? 9 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : இதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI M. K. SOMASUNDARAM : கையாடப்பட்ட பணத்தை வசூல் செய்வதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்போகிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : கையாடப்பட்ட பணத்தை கூடுமானவரை வசூல் செய்வதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அந்த ஆசாமிகளிடமிருந்து வசூல் செய்ய முடிந்த வரையில் வசூல் செய்வார்கள். வசூல் பண்ணமுடியாத நிலைமையில் இருந்தால் கைவிடவேண்டியிருக்கிறது.